அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்



**காலாண்டு இதழ்**
**(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)**
**ஆகிய மாதங்களில் வெளிவரும்**

*Vol:1 Issue : 3 July 2019*
கோட்டை :1 வாயில்:3 ஜூலை 2019

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research



## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணவழகன்
முனைவர் கு.சிதம்பரம்
முனைவர் ஆர்.கமல தியாகராஜன்
முனைவர் டி.ஆதித்தன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஹெப்சி ரோஸ்மேரி
முனைவர் சு.முத்துலட்சுமி
முனைவர் சாமி திருமாவளவன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் கி.ஐயப்பன்
முனைவர் பி.இராசலிங்கம் (தமிழகன்)
திரு வி.பாலமுருகன் (மயிலம் இளமுருகு)
முனைவர் வே.வே. மீனாட்சி
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் K.முத்துராமன்
பேரா. முனைவர் சு.இராசவேலு
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன்
முனைவர் ர.பூங்குன்றன்
திரு. கி.ஸ்ரீதரன்
திரு. சரித்திரச்செம்மல் ச.கிருஷ்ணமூர்த்தி
சிற்பக்கலாநிதி ஸ்தபதி வே.இராமன்
திரு. காந்திராஜன்
முனைவர் ஆ.அன்பழகன்
முனைவர் சி. மகேஸ்வரன்
முனைவர் எஸ்.சந்திரசேகரன்
முனைவர் P.பாண்டிக்குமார்
முனைவர் பகவதி சுந்தரம் சிவமாருதி
முனைவர் எம்.கஜராஜன்
திரு. கா. பால கிருஷ்ணன் (பாலபாரதி)
திரு. சிங்க நெஞ்சன்



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
## இதழாக்கம்

**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


கடைச்சங்கக் கடைசி அரசனின் அறியப்பெறவேண்டிய வரலாறு
முனைவர் வாணி அறிவாளன்

புறப்பொருள் வெண்பாமாலை வெளிப்படுத்தும் வாழ்வியல் நெறிகள்
முனைவர் க.லெனின்

ஒப்பீட்டு நோக்கில் அகத்திணை மரபும் காமத்துப்பாலும்
முனைவர் ப.விமலா அண்ணாதுரை,

குறிஞ்சித்திணையில் கருப்பொருள் வெளிப்பாடு
முனைவர் தி.மணிமொழி

சங்ககாலப் பெண்பாற்புலவர் பாடல்களில் நாடகக் காட்சிப்படிமம்
து. உமாமகேஸ்வரி

பதினெண் கீழ்க்கணக்கில் இருவாழ்விகள்
திருமதி ச.மீனாட்சி

தமிழ்ச் சிறுகதைகளின் மாறுபட்ட சமூகநிலைகளும் பின்புலங்களும்
முனைவர். வி.கலாவதி

தமிழ் நாடகங்களின் விளம்பர உத்திகள்
முனைவர்.க. தினகரன்

இணையத்தில் தமிழ் மொழியின்பயன்பாட்டை மேம்படுத்தல் - ஒருங்குறியீட்டு முறை
இரா.அருணா,

தமிழ் மின் அகராதிகள் (E-Dictionaries in Tamil)
முனைவர் மா.ரமேஷ் குமார்

நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சடங்குகள்
முனைவர் சீ. இளையராஜா

சிறுதெய்வவழிபாட்டுமுறைகளில் மக்களின் எண்ணங்கள்
முனைவர் தே. அசோக்

# அகத்தினுள்

INCORPORATION & MANIFESTATIONS OF 'SATI ELEMENTS' WITHIN THE HERO-STONES OF WESTERN TAMILNADU
**Dr. C.Maheswaran**

Neolithic Grooves found at Keezanur, Javadi hills of Tamil Nadu
**Dr. R.Ramesh**

பழந்தமிழர் பண்பாட்டில் தோல் ஓவியத்தின் பயன்பாடு
**ஓவியர். கு. கவிமணி**

Recent Archaeological Explorations in Shervarayan Hills, Tamil Nadu
**-Dr. Priyakrishnan**

ஈழப்பாண்டியன் சேந்தன் மாறன் காசு
**இராஜ சுப்பிரமணியன்**

சிலப்பதிகாரத்தில் தொல்குடிகளின் வழிபாட்டு மரபுகள்
**கோ.சதீஸ்**

தமிழகப்பழங்குடிகளின் தெருக்கூத்து அமைப்புமுறை
**முனைவர் ரே.கோவிந்தராஜ்**

உயிரியல்மற்றும் சமூகமொழியியல் பார்வைகளில் பாரதியாரின் தேசீயப் படைப்புகளின்பகுப்பாய்வு
[Biolinguistics and Sociolinguistics Approach towards Nationality in Bharathiar Patriotic Poems]
**முனைவர் சு. சந்திரசேகரன், முனைவர் சி.சித்ரா**

முகப்பு
**மராத்திய நடன மங்கை (தோல் பாவை)**



# நாட்டுப்புறவியல்

# நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சடங்குகள்

முனைவர் சீ. இளையராஜா,
உதவிப்பேராசிரியர்,
நாட்டுப்புறவியல்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் — 10.

**ஆய்வுச் சுருக்கம்:**

மனித வாழ்க்கையில் சடங்குகள் எப்பொழுது இடம் பெற்றது என்று இன்று வரையில் கணிக்க முடியாது என்கின்றனர் சமூகவியல் ஆய்வாளர்கள், அறிஞர்கள், புலவர்கள். இசை, ஆடல், மொழி போலச் சடங்குகளும் பழங்குடி மனிதர்களின் பரிணாம வளர்ச்சியில் தோன்றி இணைத்து கொண்டன எனக் கருதுகின்றனர். மனிதர்களின் வாழ்வியல் இச்சடங்குகள் அவர்களின் பண்பாட்டு நடவடிக்கைகளோடு பின்னிப் பிணைந்தவைகளாகும். மனிதர்களின் மன அமைப்பிலேயே சடங்குகளின் தோற்றத்திற்கான கூறுகள் அமைந்து கிடக்கின்றன எனலாம். அறிஞர் பிராய்டின் கருத்துப்படி சடங்கு என்பது மனிதர்களின் மடை மாற்றத் தந்திரங்களுள் ஒன்றாகும் என்கிறார். எனவே சடங்குகள் மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து உருவானவை என்பதையும் தாண்டி சடங்குகளால் உருவானது மனித வாழ்க்கை என்று கூறுமளவிற்குச் சடங்குகளின் இருப்பு அமைந்துள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:**

சடங்குகள்,நிகழ்த்துக் கலை,பண்பாடுகள்,நாட்டிப்புற மக்கள்,வாழ்வியல்

**முன்னுரை**

ஒரு இனத்தின் பண்பாடுகளாகச் சடங்குகள் விளங்குகின்றன. சடங்குகள் விளங்குகின்றன. இவை மரபு ரீதியாகத் தொடர்பவை. இது ஒரு நிகழ்த்துக்கலை போன்றது. இது ஐம்புலன்களாலும் உள்ளத்தாலும் நிகழ்த்தப்படும் செயல் ஆகும். இந்தச் சடங்குகளை நிகழ்த்துவதற்கென்றே அதற்கான நிகழ்த்துநரும் உண்டு. இச்சடங்குகளுக்கே உரிய ஆயத்தப் பார்வையாளர்களும் உண்டு. இச்சடங்குகள் குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட காலங்களில் செய்யப்படும் . சடங்குகள் மாறாதவை, நிலையானவை, ஒரே மாதிரியானவை ஆனால் இன்று நவீன சூழல்களுக்கேற்ப மாற்றம் பெற்றுள்ளன. அதற்கு ஒரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நகரும் புலம்பெயர்வே காரணமாகும்.

**சமூகத்தைக் கட்டுப்படுத்தும் ஓர் அமைப்பு முறை**

சமூக உறவுகளுக்கு இடையே செயல்படும் பொதுவான ஊடகம் தனி மனிதர்களைச் சமூகத்தோடு இணைக்கின்ற அந்தச் செறிவுள்ள குறியீட்டு உலகம்: சடங்குகள் அதிகார விளையாட்டுக்களின் மையம், அதிகார உறவுகளைக் கட்டமைப்பதும் சுட்டிக் காப்பதும் இச்சடங்குகளே “ என்று அறிஞர் மூன் குறிப்பிடுகிறார்.

சடங்குகள் பெண்களால் காப்பாற்றப்பட்டு நிலை நிறுத்தப்படுகின்றன என்பதற்குத் தேவந்தியின் கதை ஒரு சான்றாகக் காப்பியத்தில் இடம் பெறுகிறது. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரி முக்கியமான ஒரு சடங்காகக் காட்டப்பட்டுள்ளது.சிலப்பதிகாரக் காப்பியத்தில் இச்சடங்கு முறைகள் காட்டப்பட்டுள்ளன. ஒரு ஆணும் பெண்ணும் இணைகின்ற திருமணம் என்னும் மிகப்பெரிய சடங்கோடுதான் தொடங்குகிறது. இச்சடங்கை நிகழ்த்திக் காட்டும் மங்கல வாழ்த்துப் பாடல் என்னும் இந்த முதல் காதை, ஒரு காப்பியத்தை வாழ்த்தோடு தொடங்க வேண்டும் என்றும் காப்பியச் சடங்கிற்கேற்ப திங்கள், ஞாயிறு, மழை, நகர் வளம் ஆகியவைகள் போற்றப்பட்டு வாழ்த்து தொடங்குகிறது. பெரும்பாலும் மனித வாழ்க்கையில் கோவில்களில் இறை வாழ்த்து பாடி வழிபாட்டு சடங்குகளை நிகழ்த்துகின்றனர். சடங்குகள் முன்னோர்கள் மரபு வழியாகப் பின்பற்றி வந்த்ததை இன்றளவும் கடைப் பிடித்து வருகிறோம். திருமணச் சடங்குகள் மட்டுமின்றி அனைத்து சடங்குகளும் இனக்குழுக்களுக்கு ஏற்ப மாற்றம் அடைகின்றன. சடங்கில்லாத வாழ்வு சந்தோசமில்லாத சாவு என்பார்கள். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்கிலேயே மூழ்கிக் கொண்டு வாழ்கிறான். சடங்குகள் நாட்டுப்புறவியலில் நம்பிக்கை, பழக்க வழக்கம், வாழ்வியல் நடைமுறை ஆகியவற்றைத் தாங்கி வருகிறது. சடங்குகள் என்றால் என்னவென்று எளிதாக வரையறுத்து விட முடியாது. ஆனால் பல்வேறு கூறுகளைக் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கலாம்.

கோவலன், கண்ணகி கவுந்தியடிகள் மூவரும் பார்த்திருக்க வேடர்குலப் பெண்களின் சடங்குகள் சித்தரிக்கப்படுகின்றன. சாலினி என்ற பெண் கொற்றவையாக அலங்கரிக்கபடுகிறாள். அவள் மேல் தெய்வம் வருகிறது. வந்த கணத்திலேயே கணவனோடு இருந்த கண்ணகியைப் பார்த்து,

> இவளோ கொங்கச் செல்வி; குடமலையாட்டி
> தெந்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து;
> ஒரு மாமணி ஆய்; உலகிற்கு ஓங்கிய
> திருமாமணி (வேட்டுவ வரி 47-50 )

எனத் தெய்வ வாக்கு உரைக்கிறாள். இது போலவே மாதரியிடம் அடைக்கலம் கொடுக்கும் சடங்கின் போதும் அருகனைத் தவிர என் தலை மற்றொருவரை வணங்காது; என் நா மற்றொரு பெயரை உச்சரிக்காது; என் கண் மற்றொருவரைக் காணாது எனத் தவக் கோலம் பூண்டிருக்கும் கவுந்தியடிகள் கண்ணகியைக் கீழ்க்கண்டவாறு தெய்வத்திற்கு மேலாகப் புகழ்கிறாள். சிலப்பதிகாரத்தில் தீ நிமித்தம் கண்டவுடன் இடையர் குலப் பெண்கள் எடுக்கும் குரவை ஆடல் சடங்கு, ஆயர் பாடியில் கோவலனின் பாதங்களைக் கழுவித் துடைத்து கண்ணகி அவனுக்கு உணவு படைக்கும் சடங்கு, நான் கண்ட கனவை அரசரிடம் சொல்வதற்காகப் பணிப் பெண்கள் சூழ அரண்மனைக்கு வரும் அரசியின் வருகைச் சடங்கு, வட நாட்டின் மேல் படையெடுத்த சேரன் செங்குட்டுவன் நீலகிரி பாடி வீட்டில் தங்கியிருக்கும்போது சஞ்ஞையின்

முதலியோர் வந்து பரிசுப் பொருள்களாகக் கொடுக்கும் சடங்கில் பரிசுப் பொருட்களில் ஒன்றாக 102 நாடக மகளிரும் இருந்தனர் என்கிற செய்தி, கோவலன் வெட்டுண்டு இறந்த பிறகு மாதவி, கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி தாய்மார்கள் இறப்பது, மாதவி மகளோடு துறவறம் பூணுவது, வரந்தரு காதையில் இறந்து போன கண்ணகியின் தாயும், கோவலனின் தாயும் மாதரியின் தோன்றி கண்ணகி சிலையின் முன் அரற்றிப் புலம்பும் சடங்கு காட்சிகள் முதலியன பலவும் சடங்குகளின் வழியாகப் பெண்களின் நிலையை எடுத்துக் கூறியுள்ளன. காப்பியம் முழுதும் காட்டப்படும் சடங்குகள் அனைத்தையும் பெண்கள் தான் முன்னின்று நிகழ்த்துகின்றனர். முப்பது காதைகளில் ஏறத்தாழ 17 காதைகள் காப்பியத்தில் நிகழ்த்தப்படும் சடங்குகளின் பெயர்களைத்தான் சூட்டிக் கொண்டுள்ளன. அந்த அளவிற்கு சிலப்பதிகாரக் காப்பியம் சடங்குகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது. மனிதனின் பிறப்பிலிருந்து இறப்பு வரையிலும் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற மரபு வழிப்பட்ட பலவகையான பழக்கவழக்கங்களும் அதற்குக் காரணமான நம்பிக்கைகளும் அந்நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கின்ற சடங்குகளும், சடங்குகளின் வழியில் ஏற்பட்ட வழிபாடுகளும் இன்றும் நம்முடைய கிராமங்களில் உள்ள மக்களால் முறையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

நாட்டுப்புற மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் அவற்றையொட்டிச் சடங்கு நிகழ்வுகள் ஏன்? யாரால்? எப்படி? ஏற்பட்டன என்ற வினாக்களுக்குப் பதில் இருக்கின்ற வகையில் ஆர்னால்டு வான் ஜெனாப் என்ற மேலைநாட்டு அறிஞர் ஒரு கோட்பாட்டினை நிறுவியுள்ளார். அக்கோட்பாட்டின் அடிப்படையில் வாழ்க்கைச் சுழற்சி சடங்குகளையும் அதனோடு தொடர்புடைய பழக்கவழக்கங்களையும் மெய்ப்பித்துக் காட்டுகிறார். வாழ்க்கைப் பருவ மாற்ற சடங்குகளில் உள்ள மூன்று படிநிலைகள் 1. பிரிவுநிலை 2. மாற்ற இடையீட்டு நிலை 3. கூட்டிணைப்புநிலை என்று வான் ஜெனப் சுட்டிக் காட்டுகின்றார்.

**பிரிவுநிலை**

ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கோ ஒரு குழுவிலிருந்து இன்னொரு குழுவிற்கோ ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்கோ, ஒரு உறவுமுறைநிலையிலிருந்து பிறிதொரு உறவுநிலைக்கோ ஒருவர் மாற்றப்பட வேண்டும்.இதற்கு முதலாவதாக மாற்றம் பெற வேண்டியவர் இருக்கின்ற இடத்திலிருந்து அல்லது குழுவிலிருந்து அல்லது உறவுமுறையிலிருந்து அவரைப் பிரிக்க வேண்டும் இதுவே பிரிவுநிலை ஆகும். இதற்குரிய சடங்குகள் பிரிவுநிலையில் உட்படுத்தப்படும்.

**மாற்ற இடையீட்டு நிலை**

மாறும் தகுதியைப் பெறுவதற்கான விதிமுறைகளுக்கு உட்படுவதே மாற்ற இடையீட்டு நிலை எனப்படும். உரிய தகுதிகளைப் பெறுவதற்காகச் சடங்குகளுகுரியவர் தனிப்படுத்தப்படுவார்.

**கூட்டு இணைப்புநிலை**

புதிய இடம் குழுநிலை அல்லது உறவுமுறையில் முறைப்படி ஒருவரை அமர்த்துவதே கூட்டு இணைப்பு நிலை எனப்படும். இதற்குரிய சடங்குகள் இதனுள் அடங்கும்.

சடங்கு என்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தையின் வடிவமாகும். நம்பிக்கைக்ளையும், இலட்சியங்களையும் சடங்குகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. நம்பிக்கையினால் ஏற்படும் தீய விளைவுகளைப் போக்குவதற்கு சடங்குகள் நிகழ்த்த வேண்டியுள்ளது. மனிதன் பிறந்ததிலிருந்து இறப்புவரையிலும் ஒவ்வொரு கட்டத்திலும் சடங்குகளைச் செய்து கொண்டு இருக்கிறான். மனித வாழ்க்கை சடங்குகளால் கட்டுண்டு கிடக்கிறது. முன்னோர் செய்த செயல்களை ஏன் செய்கிறோம்? எதற்குச் செய்கிறோம்? என்று ஆராய்ச்சி செய்கிறான். அந்தந்தப் பருவத்தில் அதற்கான சடங்குகளைச் செய்யாவிட்டால் தீமை நிகழும் என்பது நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையாகும். முதல் சடங்கு நாம் பிறக்கும்போது தொடங்கிவிடுகிறது. குழந்தை பிறந்த முப்பது நாட்களுக்குள் தூய்மைச் சடங்கு நடத்த வேண்டும் என்பது நாட்டுப்புற மக்களின் எழுதப்படாத சட்டம்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் தமிழகத்தில் புரட்சியை ஏற்படுத்தி தன் பிரச்சாரத்தைப் பட்டி தொட்டியெங்கும் பரப்பிய பிறகுதான் மக்கள் சமுதாய விழிப்புணர்வு பெற்று மூடநம்பிக்கையிலிருந்து மீளத் தொடங்கினார்கள். எந்த ஒரு செயலும் இக்காலத்திலும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் செய்யப்படுகிறது. மதச்சார்பற்ற திராவிடக்கட்சி தலைவர்கள் உட்பட அனைவரும் நல்ல நேரம் பார்த்து தான் தேர்தல் காலங்களில் வேட்பு மனு தாக்கல் செய்கின்றனர்.

மனிதனின் பண்பாட்டையும் பழமையையும் அவர்களின் நம்பிக்கைகளும் சடங்குகளும் வெளிப்படுத்துகின்றன. நம்பிக்கைகளும் சடங்குகளும் இல்லாத சாதி அமைப்பே இல்லை என்று கூறும் அளவிற்கு எல்லா சமூக-சாதி அமைப்புகளிலும் சடங்கு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பலவிதமான நம்பிக்கைகளையும் சடங்குகளையும் மக்கள் பின்பற்றிக் கொண்டிருக்கின்றனர். மனிதனின் வாழ்வை இயக்குவதே நம்பிக்கைகளும் சடங்குகளும்தான் என்று கூறும் அளவில் ஆதிமனிதன் முதல் அரசியல் தலைவர்கள் வரை அதற்கு அடிமைப்பட்டுள்ளனர்.

ஒரு வளர்ச்சியடைந்த மனிதனிடம் பத்தாயிரக் கணக்கான நம்பிக்கைகளும் நூற்றுக்கணக்கான வழக்கங்களும், எண்ணிக்கைகளுக்குட்பட்ட சில குறிக்கோள்களும் இருப்பதாகச் சமூக அறிவியல்

கலைக்களஞ்சியம் சுட்டுகின்றது. மக்களால் உருவாக்கப்பட்ட நம்பிக்கைகள், சடங்குகள் நடைமுறை வாழ்க்கையில் அதிகமாகவும், இலக்கியங்களில் இடம் பெறும் நம்பிக்கைகள், சடங்குகள் அக்காலகட்டத்தில் சமுதாய செல்வாக்கு பெற்ற நம்பிக்கைகளாகவும் அமையும். நாட்டுப்புற மக்களிடையே மண்டிக்கிடக்கும் நம்பிக்கைகளை விட, பழந்தமிழ் மக்கள் சிந்தனைகளுக்கு முதலிடத்தையும் நம்பிக்கைகளுக்கு இரண்டாமிடத்தையும் அளித்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

முடிவுரை;

மனித வாழ்க்கையில் சுழற்சி முறையாக மேற்கொள்ளப்படும் சடங்கு முறைகள் இச்சடங்கு முறையை ஒட்டிய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலானவை எந்தச் சூழ்நிலையிலும் எந்த வளர்ச்சி வேகத்திலும் மாறுபடாது நிலைத்து நிற்பதே நாம் கண் கூடாகக் காண முடிகிறது. தகவல் தொழில் நுட்ப சாதனங்களின் தாக்கம் இன்று நாட்டுப்புற மக்களைச் சென்று அடைகின்ற நிலையிலும் தகவல் தொழில்நுட்ப பயனை அனுபவித்துக் கொண்டிருக்கும் கிராமப்புற மக்கள் அவரவர் தேவைக்கு ஏற்ப சடங்கு முறைகளில் பழமைத் தன்மையை மாற்றாமல் கடைப்பிடித்து வருகின்றனர். இச்சடங்குகள் சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை இருக்கிறது என்பதை அறிய முடிகிறது. சடங்கு என்பது மனித்னின் வாழ்வியலில் இருந்து பிரிக்க முடியாது என்பதை மட்டுமே தெளிவாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**பயன்பட்ட நூல்கள்**


1.சிலப்பதிகாரம்- அடியார்க்கு நல்லார் உரை

2.புதிய கோட்பாட்டு நோக்கில் பழந்தமிழ் இலக்கியம்- முனைவர் க.பஞ்சாங்கம்

3. பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும்- க.கைலாசபதி

4. சமூக மானுடவியல்- ஆ.செல்ல பெருமாள்

5. மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள் — தெ. ஞானசேகரன்

6. நாட்டுப்புறவியல் ஆய்வுகள்- ஆறு. இராமநாதன்

7. நாட்டுப்புறவியல் ஆய்வு- சு.சக்திவேல்

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2019, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- செப்டம்பர் 10.அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com

✉ aranjournal@gmail.com

✆ 72995 87879